RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 358 | டிசம்பர்.28 2025 ஞாயிற்றுக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## இந்தியாவுடன் வர்த்தக ஒப்பந்தம்; அதிக வருமானம், வேலைவாய்ப்புகளை உறுதி செய்யும்; நியூசிலாந்து பிரதமர் மகிழ்ச்சி




இந்தியா, டிச.28-

இந்தியா உடனான தடையில்லா வர்த்தக ஒப்பந்தம், அதிக வேலைவாய்ப்புகள், வருமானத்தை உறுதி செய்யும் என நியூசிலாந்து பிரதமர் கிறிஸ்டோபர் லக்சன் தெரிவித்தார்.

அண்மையில், தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான பேச்சுகளை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளதாக இந்தியாவும், நியூசிலாந்தும் அறிவித்தன. இரு நாட்டு பிரதமர்களும் தொலைபேசி வாயிலாக உரையாடி, இதை உறுதி செய்தனர். இந்த தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தில் இந்தியர்களுக்கு அதிக சலுகைகள் வழங்கப்படுவதாகக்கூறி நியூசிலாந்தில் அரசியல் எதிர்க்குரல்கள் எழுந்தன.

இந்த ஒப்பந்தத்தால் இறக்குமதி வரிக்குறைப்பு, தொழிலாளர் விதிகளில் சீர்திருத்தங்கள், பணி விசா விரிவாக்கம், இந்திய மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு ஆகியவை கிடைக்க உள்ளன. நியூசிலாந்து வெளியுறவுத்துறை அமைச்சர் வின்ஸ்டன் பீட்டர்ஸ், ' இந்திய மாணவர்களுக்கு சலுகைகள் அளிப்பதால் நியூசிலாந்து மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு நெருக்கடி ஏற்படும்' என எதிர்ப்பு தெரிவித்தார்.

இந்த சூழலில், நியூசிலாந்து பிரதமர் கிறிஸ்டோபர் லக்சன் சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: எனது முதல் பதவிக்காலத்தில் இந்தியாவுடன் ஒரு தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை எட்டுவோம் என்று நாங்கள் கூறினோம், அதை நாங்கள் நிறைவேற்றியுள்ளோம்.

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க ஒப்பந்தம், 140 கோடி இந்திய நுகர்வோருக்கான கதவைத் திறப்பதன் மூலம், அதிக வேலைவாய்ப்புகள், அதிக வருமானம் மற்றும் அதிக ஏற்றுமதிகளை உறுதி செய்கிறது. இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# “ஜென் இசட், ஆல்பா தலைமுறை நாட்டை வழிநடத்தும்” பிரதமர் நரேந்திர மோடி நம்பிக்கை



புதுடெல்லி: டிச.28-

பல்வேறு துறைகளில் சாதனை படைத்த 20 சிறாருக்கு குடியரசுத் தலைவர் மாளிகையில் நேற்று தேசிய சிறார் விருது வழங்கப்பட்டது. இதைத் தொடர்ந்து டெல்லி பாரத் மண்டபத்தில் நடைபெற்ற விழாவில் 20 சிறார்களையும் சந்தித்து பிரதமர் மோடி பேசியதாவது:

சீக்கிய குரு கோவிந்த் சிங்கின் இளைய மகன்கள் பாபா சோராவார் சிங் (9), பாபா பதே சிங் (6) ஆகியோர் முகலாய படை வீரர்களால் கடத்தப்பட்டனர். இரு குழந்தைகளையும் மதம் மாறச் சொல்லி முகலாய ஆட்சியாளர்கள் நிர்பந்தம் செய்தனர். வீரம்மிக்க இரு சிறுவர்களும் மதம் மாற மறுத்துவிட்டனர். கடந்த 1704ம் ஆண்டு டிசம்பர் 26ம் தேதி இரு சிறுவர்களும் உயிரோடு புதைக்கப்பட்டனர். அவர்களின் வீர மரணத்தின் நினைவாக ஆண்டுதோறும் டிசம்பர் 26ம் தேதி வீர பாலகர் தினம் கொண்டாடப்படுகிறது. இந்த நாளில் பல்வேறு துறைகளில் சாதனை படைத்த 20 பேருக்கு தேசிய சிறார் விருது வழங்கப்பட்டு உள்ளது.

நமது நாடு பல்வேறு துறைகளில் சாதனை படைத்து வருகிறது. டிஜிட்டல் இந்தியா திட்டம் மிகப் பெரிய வெற்றி பெற்றிருக்கிறது. இளைஞர்களின் நலனில் மத்திய அரசு அதிக அக்கறை செலுத்தி வருகிறது. அவர்களுக்கு திறன்சார் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. விண்வெளி, நிதிச்சேவை தொழில்நுட்பம், உற்பத்தி துறை உட்பட அனைத்து துறைகளிலும் இளைஞர்களுக்கு புதிய வாய்ப்புகள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

இந்தியாவின் ஜென் இசட், ஜென் ஆல்பா தலைமுறையினர் மிகுந்த அறிவாளிகள். அவர்களின் திறமை, தன்னம்பிக்கை, தலைமைப் பண்பு வியப்பளிக்கிறது. அடல் டிங்கரின் ஆய்வகங்கள் மூலம் மாணவ, மாணவியர் ஆராய்ச்சியில் அதிகம் ஈடுபட ஊக்கம் அளிக்கப்படுகிறது. தேசிய கல்விக் கொள்கையில் தாய்மொழிக் கல்விக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. இதன்மூலம் மாணவ, மாணவியரின் கற்றல் திறன் அதிகரிக்கிறது.

இந்தியாவின் எதிர்காலம் இளம் தலைமுறையினர் கையில் உள்ளது. வரும் 2047ம் ஆண்டில் வளர்ச்சி அடைந்த இந்தியாவை உருவாக்க இலக்கு நிர்ணயித்து உள்ளோம். இந்த லட்சியத்தை நோக்கி ஜென் இசட் (1997 முதல் 2012க்குள் பிறந்தவர்கள்), ஜென் ஆல்பா (2010 முதல் 2024க்குள் பிறந்தவர்கள்) தலைமுறையினர் நமது நாட்டை வழிநடத்துவார்கள். இவ்வாறு பிரதமர் மோடி பேசினார்.

சந்தாலி மொழியில் அரசியலமைப்பு சட்டம்: டெல்லியில் நேற்று முன்தினம் நடைபெற்ற விழாவில் அரசியலமைப்பு சட்டத்தை சந்தாலி மொழியில் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு வெளியிட்டார்.

இந்நிலையில், ‘எக்ஸ்' தளத்தில் பிரதமர் மோடி வெளியிட்டுள்ள பதிவில், ‘‘சந்தாலி மொழியில் உள்ள அரசியலமைப்புச் சட்டம், அரசியலமைப்பு குறித்த விழிப்புணர்வையும் ஜனநாயகப் பங்கேற்பையும் ஆழப்படுத்த உதவும். இது பாராட்டத்தக்க முயற்சி! சந்தாலி கலாச்சாரம் குறித்தும் நாட்டின் முன்னேற்றத்துக்கு சந்தாலி மக்கள் ஆற்றிய பங்களிப்பு பற்றியும் இந்த நாடு மிகுந்த பெருமை கொள்கிறது’’ என்று கூறியுள்ளார்.

2003ம் ஆண்டின் 92வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் மூலம் அரசியலமைப்பின் 8வது அட்டவணையில் சந்தாலி மொழி சேர்க்கப்பட்டது. ஜார்க்கண்ட், ஒடிசா, மேற்கு வங்கம், பிஹார் ஆகிய மாநிலங்களில் கணிசமான பழங்குடி மக்களால் இம்மொழி பேசப்படுகிறது.

நாடாளுமன்றத்தில் தமிழில் அதிக உரைகள்: பிரதமர் மோடி பேசியதாவது: ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் 1835ம் ஆண்டில் மெக்காலே கல்வி திட்டம் அமல் செய்யப்பட்டது. நாடு சுதந்திரம் அடைந்த பிறகும் இந்த கல்வி திட்டம் மாற்றப்படவில்லை. தற்போது புதிய இந்தியா உருவாகி உள்ளது.

நாம் காலனி ஆதிக்க மனநிலையில் இருந்து முழுமையாக விடுபட்டு விட்டோம் என்பது நாடாளுமன்றத்தில் தெளிவாக உணர்த்தப்பட்டது. அண்மையில் நடந்த குளிர்கால கூட்டத் தொடரில் இந்தி, ஆங்கிலத்தை தவிர்த்து இந்திய மொழிகளில் 160 உரைகள் நிகழ்த்தப்பட்டன.

இதில் அதிகபட்சமாக தமிழில் 50 உரைகள் நிகழ்த்தப்பட்டன. மராத்தியில் 40, வங்கமொழியில் 25 உரைகள் நிகழ்த்தப்பட்டன. இந்தியாவின் மொழிகளை அழிக்க மெக்காலே முயற்சி செய்தார். அதில் இருந்து இந்தியா விடுபட்டு நாட்டின் அனைத்து மொழிகளையும் பாதுகாத்து வருகிறோம். இவ்வாறு பிரதமர் நரேந்திர மோடி பேசினார்.

## மக்கள் மீது திமுகவினர் தாக்குதல் நடத்துவதை முதல்வர் வேடிக்கை பார்க்கலாமா: நயினார் கேள்வி



சென்னை, டிச.28-

அப்பாவி மக்கள் மீது திமுகவினர் தாக்குதல் நடத்துவதை முதல்வர் ஸ்டாலின் வேடிக்கை பார்க்க கூடாது என தமிழக பாஜ தலைவர் நயினார் நாகேந்திரன் வலிறுத்தி உள்ளார்.

அவரது அறிக்கை: சென்னையில் இரு வாகன உரிமையாளர்களுக்கு இடையிலான மோதலைக் கட்டப் பஞ்சாயத்து செய்து தீர்க்க வந்த சேப்பாக்கம் பகுதி திமுக 63வது வட்டச் செயலாளர், காதுகள் கூசும் அளவிற்குக் கெட்ட வார்த்தைகளால் பேசும் வீடியோ வெளியாகியுள்ளது.

இப்படி எந்தவொரு அதிகாரமும் நாகரிகமுமின்றி பொதுமக்களை வாய்க்கு வந்தபடி வசைபாடும் நபர்கள் தொடங்கி பெண்களின் பாதுகாப்பைச் சூறையாடும் காமுகர்கள் வரை அனைத்து உடன்பிறப்புகளையும் ஆளுங்கட்சி திமிரை ஊட்டி வளர்த்துவிட்டு, மேடைகளில் மட்டும் பகுத்தறிவு பாடம் எடுப்பது தான் திமுக அரசின் திராவிட மாடலா?

ஆமாம், பொது மேடையில் வைத்தே அமைச்சர் பொறுப்பில் இருந்து கொண்டே பெண்களைப் பற்றி ஆபாசமாகப் பேசும் மூத்த தலைவர்களைக் கொண்ட கட்சி, எப்படி வளர்ச்சி அரசியலை முன்னெடுக்கும்? ரவுடிகளை மட்டும் தான் வளர்த்துவிடும். இத்தகைய கருப்பு சிவப்புப் படையைக் கைக்குள் வைத்துக்கொண்டு, தமிழகத்தைத் தலைகுனிய விடமாட்டேன் என்று முழங்குவது வெட்கக்கேடு.

தாங்கள் வகிக்கும் பதவியின் பொறுப்புணர்ந்து உடனடியாக, அவதூறாகப் பேசிய வட்டச்செயலாளர் மீதும், இருசக்கர வாகன உரிமையாளரைத் தாக்கிய கார் உரிமையாளரின் மீதும் வழக்குப் பதிய உத்தரவிடுங்கள். அப்பாவி மக்கள் மீது திமுகவினர் தாக்குதல் நடத்துவதை முதல்வர் ஸ்டாலின் வேடிக்கை பார்க்க கூடாது. இவ்வாறு நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

## என்னோடு நேருக்கு நேர் விவாதிக்க தயாரா? முதல்வருக்கு இபிஎஸ் சவால்



சென்னை, டிச.28-

என்னோடு நீங்கள் நேருக்கு நேர் மேடையில் விவாதிக்க தயாரா? என முதல்வர் ஸ்டாலினுக்கு அதிமுக பொதுச்செயலாளர் இபிஎஸ் சவால் விடுத்துள்ளார்.''நெஞ்சை நிமிர்த்தி காலரை உயர்த்தி தமிழகம் முன்னேறுகிறது. இதில் 5 சதவீதமாவது அதிமுக ஆட்சியில் நடந்ததா? அவர்களால் சொல்ல முடியுமா? இது என்னுடைய ஓபன் சேலஞ்ச். தைரியம் இருந்தால் அவர்கள் சொல்லட்டும்,'' என முதல்வர் ஸ்டாலின் கேள்வி எழுப்பி இருந்தார். இதற்கு பதில் அளித்து இபிஎஸ் வெளியிட்ட அறிக்கை: நேற்று கள்ளக்குறிச்சியில் மேடை ஏறி ஓபன் சேலஞ்ஜ் விடுத்த முதல்வரே. நீங்கள் மேடை போட்டு பேசிய அந்த கள்ளக்குறிச்சி மாவட்டமே எனது தலைமையிலான அதிமுக ஆட்சியில் தான் உருவானது என்பது உங்களுக்கு தெரியுமா? தெரியாதா?நீங்கள் நின்று பேசிய அதே கள்ளக்குறிச்சியில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி சொல்லும், அதிமுக ஆட்சியின் சாதனை என்னவென்று. அதிமுக ஆட்சியின் திட்டங்களுக்கு ரிப்பன் வெட்டி ஸ்டிக்கர் ஒட்டுவதையே 95% வேலையாகக் கொண்ட நீங்கள், 5% திட்டங்கள் பற்றி எல்லாம் கேள்வி கேட்கலாமா? அதற்கு கொஞ்சமாவது உங்களுக்கு தகுதி இருக்கிறதா?

தமிழகத்தின் சட்டம் ஒழுங்கை, பெண்கள் பாதுகாப்பைச் சீர்குலைத்துவிட்டு, எங்கு திரும்பினாலும் ஆசிரியர்கள், நர்சுகள், அரசு ஊழியர்கள், மாற்றுத் திறனாளிகள் என அனைவரையும் நடுத்தெருவில் போராட நிறுத்திவிட்டு, Col-larஐ தூக்கி விட்டு பேசுகிறீர்களே. உங்களுக்கு கொஞ்சம் கூட வெட்கமாக இல்லையா?20 லட்சம் மாணவர்களுக்கு லேப்டாப் என்று போகிற போக்கில் அளந்து விட்டால் மக்கள் நம்பி விடுவார்களா? எத்தனை லேப்டாப் யாருக்கு போய் சேர்ந்தது?தேர்தல் பயத்தில், நான்கரை ஆண்டுகள் கொடுக்காமல் தற்போது அவசர கதியில் அரைகுறையாக கொடுக்கப் போவதை பெருமை பேச உங்களுக்கு கூச்சமாக இல்லையா? செல்போன் ரீசார்ஜ் செய்தாலே ஓராண்டுக்கு கிமி சந்தா இலவசமாக கிடைக்கும் நிலையில், அதே கிமி சந்தாவை 6 மாதத்திற்கு மட்டுமே வழங்கப் போவதாக தெரிவித்துள்ளது உங்கள் விடியா அரசு. இதெல்லாம் எவ்வளவு பெரிய ஏமாற்று வேலை என்பதை அறிவார்ந்த மாணவர்களுக்கு தெரியும்.

முதல்வர் ஸ்டாலின் மூச்சு இரைக்க வாசித்த பட்டியல் என்பது, நீங்கள் நடத்திய போட்டோஷூட்களின் பட்டியல். இதேபோல், நீங்கள் கொடுத்த தேர்தல் வாக்குறுதிகளில் எத்தனையை நிறைவேற்றினீர்கள் என்பதையும் இதேபோல் வாசிக்கத் தயாரா? (கவலை வேண்டாம். மூச்சு இரைக்க வாய்ப்பே இல்லை!) அப்புறம்... ஏதோ ளிஜீமீஸ் நீலீணீற்றீமீஸீரீமீ என்று சொன்னீர்களே...

பல ஆண்டுகளாக உங்களுக்கு நான் வைத்த ஒரு ஓபன் சேலஞ்ச் றிமீஸீபீவீஸீரீல் இருக்கிறது.என்னோடு நீங்கள் நேருக்கு நேர் மேடை ஏறத் தயாரா? அதிமுக ஆட்சி பற்றி நீங்கள் என்ன கேட்டாலும் நான் பதில் சொல்லத் தயார். திமுக ஆட்சி பற்றி எனது கேள்விகளுக்கு நீங்கள் பதில் சொல்லத் தயாரா? ஓபன் சேலஞ்சுக்கு பிறகு முதல் கே ள்வி நீட் ரத்து என்னாச்சு? இவ்வாறு இபிஎஸ் கூறியுள்ளார்.

## சிவகாசி அருகே வீட்டின் இரும்பு கேட் பெயர்ந்து விழுந்து இரு சிறுமிகள் உயிரிழப்பு



சிவகாசி, டிச.28-

சிவகாசி அருகே கொங்கலாபுரத்தில் வீட்டில் இரும்பு கேட் பெயர்ந்து விழுந்ததில் விளையாடிக் கொண்டிருந்த இரு சிறுமிகள் இடிபாடுகளில் சிக்கி பரிதாபமாக உயிரிழந்தனர்.

சிவகாசி அருகே கொங்கலாபுரத்தை சேர்ந்தவர் ராஜேஸ்வரி. இவர் சிவகாசி நகர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறார். இவரது மகள் கமலிகா (9) சிவகாசியில் உள்ள பள்ளியில் நான்காம் வகுப்பு படித்து வருகிறார். ராஜேஸ்வரியின் தங்கை தனலட்சுமியின் மகள் ரிஷிகா (4). பள்ளி விடுமுறை என்பதால் கமலிகா, ரிஷிகா இருவரும் வீட்டில் விளையாடி வந்தனர்.வீட்டு வாசலில் விளையாடியபோது, வீட்டின் இரும்பு கேட் அஸ்திவாரம் பெயர்ந்து குழந்தைகள் மீது விழுந்தது. இதில் படுகாயமடைந்த குழந்தைகளை உறவினர்கள் மீட்டு சிவகாசி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு பரிசோதித்த மருத்துவர்கள் குழந்தைகள் இருவரும் ஏற்கெனவே உயிரிழந்து விட்டதாக தெரிவித்தனர்.

இது குறித்து சிவகாசி போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். வீட்டு வாசலில் விளையாடிக் கொண்டிருந்த சிறு குழந்தைகள் மீது இரும்பு கேட் விழுந்து உயிரிழந்த சம்பவம் பகுதியில் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது

## திருப்பரங்குன்றம் மலை தர்காவுக்கு அசைவ பிரியாணிக்கு கொண்டு சென்றவர்கள் தடுத்து நிறுத்தம்!

மதுரை, டிச.28-

திருப்பரங்குன்றம் மலை மீதுள்ள சிக்கந்தர் தர்கா சந்தனக்கூடு திருவிழாவை முன்னிட்டு, அசைவ பிரியாணியை கொண்டுசென்ற கேரளம் மற்றும் தென்காசி முஸ்லிம்களை போலீஸார் தடுத்து நிறுத்தினர்.

முருகப்பெருமானின் முதல்படை வீடான திருப்பரங்குன்றம் முருகன் கோயில் மலை உச்சியிலுள்ள தீபத்தூணில் டிசம்பர் 3ம் தேதி தீபம் ஏற்ற வேண்டும் என, உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

ஆனால் தமிழக அரசும், கோயில் நிர்வாகமும் தீபம் ஏற்ற அனுமதிக்கவில்லை. மேலும், அன்றைய தினம் மாவட்ட ஆட்சியர் பிரவீன்குமார் 144 தடை உத்தரவு பிறப்பித்தார்.

இதனால், மாநகரக் காவல் ஆணையர் ஜெ.லோகநாதன் தலைமையிலான போலீஸார், தீபம் ஏற்றச் சென்ற மனுதாரர்கள் உள்ளிட்டோரை தடுத்து நிறுத்தினர். அதையடுத்து, உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கும், அரசின் மேல்முறையீட்டு வழக்கு விசாரணையும் நடந்து வருகிறது.

இதனிடையே, மலை மீதுள்ள சிக்கந்தர் பாதுஷா தர்கா சந்தனக்கூடு திருவிழா டிசம்பர் 21ல் கொடியேற்றத்துடன் தொடங்கியது.

19 நாட்களாக இருந்து வந்த போலீஸாரின் தடைகள் சந்தனக்கூடு திருவிழாவுக்காக அகற்றப் பட்டு, மலைக்குச் செல்ல அனுமதி அளிக்கப்பட்டது.

இதனால், தினமும் தமிழகத்தின் பிற பகுதிகளிலிருந்தும், கேரள மாநிலத்திலிருந்தும் முஸ்லிம்கள் மலை மீதுள்ள சிக்கந்தர் தர்காவுக்குச் சென்று வருகின்றனர்.

இவர்களை போலீஸார் சோதனையிட்டு அனுப்பி வருகின்றனர். இந்நிலையில், நேற்று கேரள மாநிலம் மற்றும் தமிழகத்தின் தென்காசி பகுதியைச் சேர்ந்த 62 பேர் பழனியாண்டவர் கோயில் மலையடிவாரத்திலிருந்து மலைக்குச் சென்றனர்.

அவர்களை தடுத்து நிறுத்தி, அவர்கள் கொண்டுசென்ற பைகள், பாத்திரங்களை போலீஸார் சோதனையிட்டனர். அதில், அவர்கள் அசைவ பிரியாணி கொண்டு செல்வது தெரியவந்தது.

மலைக்கு மேல் அசைவ உணவுகள் கொண்டு செல்ல தடை உள்ளதாக தெரிவித்து, அவர்களை திருப்பி அனுப்பினர். ஆனால், அவர்கள் அருகிலுள்ள பள்ளிவாசலில் அசைவ பிரியாணியை வைத்து விட்டு மலைக்குச் சென்றனர்.

அப்போது, குழுவாக வந்த 62 பேரில் முதலில் 57 பேரை போலீஸார் அனுப்பினர். பின்னர், 5 பேர் அசைவ பிரியாணியை மற்றொரு இடத்தில் வைத்துவிட்டு, தாமதமாக தனியாகச் சென்றனர். போலீஸார் சோதனையில் அசைவ பிரியாணி கண்டறியப்பட்டதால், அங்கு திடீர் சர்ச்சை ஏற்பட்டது.



# காளையார்கோவில் கிழக்கு ஒன்றிய திமுக செயற்குழு கூட்டம்

## ஆரோக்கியசாமி ஒன்றிய செயலாளர் தலைமையில் நடைபெற்றது

காளையார் கோவில் டிச28-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் கிழக்கு ஒன்றிய திமுக பாகநிலை முகவர்கள், பாக டிஜிட்டல் ஏஜென்ட்கள் ஆலோசனை கூட்டமானது ஒன்றியக்கழக செயலாளர், காளையார்கோவில் ஒன்றியக்குழு முன்னாள் தலைவர் வே. ஆரோக்கியசாமி தலைமையில் நடைபெற்றது.இந்த நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர் ஆரோக்கியசாமி புதிய வாக்காளர் சேர்த்தல் நீக்கல் சிறப்பு முகாமில் கிழக்கு ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொண்டு புதிய வாக்காளர்களை சேர்க்கும் பணிகளில் தீவிரமாக ஈடுபட வேண்டும் உள்ளிட்ட ஆலோசனைகளை வழங்கினார். மேலும் மாவட்ட திமுக ஐடி விங் துணை ஒருங்கிணைப்பாளர் முப்பையூர் சிவா கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார்..இந்த ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்ட பிரதிநிதி ஒன்றியக்குழு முன்னாள் உறுப்பினர் கந்தசாமி ,கண்ணதாசன், இளைஞரணி அமைப்பாளர் மாராத்தூர் முத்துப்பாண்டியன், தொழிலாளர் அணி பர்மா ஆரோக்கியசாமி, சிறுபான்மை அணி ஆரோக்கிய சிறிய புஷ்பம், மகளிர் தொண்டரணி ரோஸ், இளைஞரணி துணை அமைப்பாளர்களான தென்றல் நகர் சுரேஷ் , உதயநிதி குணா உள்ளிட்ட ஏராளமான திமுகவினர் கலந்து கொண்டனர்...




# ஒருங்கிணைந்த கிறிஸ்துவ கூட்டமைப்பு மற்றும் அதிமுக இணைந்து நடத்திய மாபெரும் கிறிஸ்துமஸ் விழா

வேலூர், டிச.28-

வேலூர் மாவட்டம் குடியாத்தம் அடுத்த மேல்பட்டி பகுதியில் ஏ.ஜி.சபையில் தமிழ்நாடு ஒருங்கிணைந்த கிறிஸ்துவ கூட்டமைப்பு மற்றும் வேலூர் புறநகர் மாவட்ட அதிமுக இணைந்து நடத்தும் மாபெரும் கிறிஸ்துமஸ் விழா நடைபெற்றது. இதில் மாவட்ட கழக வேலழகன் அவர்கள் தலைமை தாங்கினார். நகர செயலாளர் J.K.N.பழனி அவர்கள் வரவேற்பு உரையாற்றினார். சிறப்பு அழைப்பாளராக அதிமுக முன்னாள் அமைச்சர் அண்ணன் K.C.வீரமணி கலந்துகொண்டு கிறிஸ்துமஸ் கேக் வெட்டி ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினர். நிகழ்ச்சியில் கழக நிர்வாகிகள் உட்பட மாவட்ட நகர ஒன்றிய வார்டு கழக நிர்வாகிகள் சார் பணி நிர்வாகிகள் தொண்டர்கள் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்





■ தென்காசி மாவட்டம் கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதியில் அஇஅதிமுக சார்பில் கழகப் பொதுச் செயலாளர் எடப்பாடி கே பழனிச்சாமி அவர்கள் போட்டியிட வேண்டுமென தென்காசி வடக்கு மாவட்ட வர்த்தக அணி செயலாளர் S.T.சங்கர சுப்பிரமணியன் விருப்ப மனு தாக்கல் செய்தார்உடன் மாவட்ட கழக செயலாளர் கிருஷ்ண முரளி என்ற குட்டியப்பாமுன்னாள் எம்எல்ஏ சுப்பையா பாண்டியன் துணைச் செயலாளர் பொய்கை மாரியப்பன் ஆகியோர் உள்ளனர் அவர்களை வர்த்தக அணி நிர்வாகிகள் சார்பில்மாவட்டத் தலைவர் எஸ் எம் ஜமைதீன்துணைத் தலைவர் தளவாய் சுந்தரம் ஆகியோர் வாழ்த்து தெரிவித்தனர்

# காட்பாடியில் சுகாதார அலுவலர் சிவகுமார் தலைமையில் பிளாஸ்டிக்கை ஒழிப்போம். மஞ்சப்பையை கையில் எடுப்போம்... விழிப்புணர்வு பேரணி

வேலூர் டிச28-

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, வேலூர் மாநகராட்சி 1வது, மண்டலத்தில் விழிப்புணர்வு பேரணி, வேலூர் மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி ஆணைக்கிணங்க, ஆணையாளர் லட்சுமணன் உத்தரவின் பெயரில், மாசு கட்டுப்பாட்டு வாரியம் மாவட்ட பொறியாளர் சந்திரசேகர் ஆலோசனைக்கிணங்க மற்றும் மாநகர நல அலுவலர் அறிவுறுத்தலின்




பேரிலும் மாநகராட்சி 1வது மண்டலத்திற்கு உட்பட்ட 14,15, ஆகிய வார்டு உட்பட்ட மெயின் ரோடுகளில் வியாபாரிகளுக்கும் பொதுமக்களுக்கும் சுகாதார அலுவலர் சிவக்குமார் தலைமையில் பிளாஸ்டிக்கை ஒழிப்போம். மஞ்சப்பையை கையில் எடுப்போம். பிளாஸ்டிக்கினால் ஏற்படும் தீமைகள் குறித்தும்பயன்படுத்தினால் வரக்கூடிய நோய்கள் குறித்தும் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.200 மேற்பட்ட வியாபாரிகளும், பொதுமக்களும் மாநகராட்சி பணியாளர்களும் கலந்து கொண்டனர். துப்புரவு ஆய்வாளர்கள், துப்புரவு மேற்பார்வையாளர்கள் மாநகராட்சி அலுவலர்கள் பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்

# வங்கதேசத்தில் ஹிந்துக்கள் மீது தாக்குதல் அதிகரிப்பு மனித உரிமை அமைப்பு குற்றச்சாட்டு

டாக்கா, டிச.28-

மத நிந்தனை என்ற போலி குற்றச்சாட்டின் கீழ் ஹிந்துக்கள் மீது வங்கதேசத்தில் தாக்குதல் நடத்தப்படுவதாக வங்கதேச சிறுபான்மையினருக்கான மனித உரிமைகள் காங்கிரஸ் (பிஸிசிங்விவி) குற்றம்சாட்டியுள்ளது.

நம் அண்டை நாடான வங்கதேசத்தில், சமீப நாட்களாக ஹிந்துக்கள், கிறிஸ்துவர்கள் உள்ளிட்ட சிறுபான்மையினருக்கு எதிராக வன்முறை சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. சமீபத்தில் ஹிந்து மதத்தைச் சேர்ந்த தீபு சந்திர தாஸ் என்ற இளைஞரை, மத நிந்தனை செய்ததாக, அங்குள்ள கும்பல் மரத்தில் தலைக்கீழாக தொங்கவிட்டு, உயிருடன் எரித்து கொன்ற சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

அதேபோல, ராஜ் பாரி மாவட்டத்தைச் சேர்ந்த அம்ரித் மண்டல் என்பவரையும் அப்பகுதியினர் அடித்துக் கொன்றனர்.

வங்கதேசத்தில் சிறுபான்மையினமான ஹிந்துக்கள் கொல்லப்பட்ட சம்பவத்திற்கு இந்தியா கண்டனம் தெரிவித்துள்ளது. இதை அரசியல் வன்முறை என்றோ, ஊடகங்களின்



மிகைப்படுத்தல் என்றோ கூறி, வங்கதேச அரசு புறக்கணிப்பதை ஏற்க முடியாது என்று மத்திய அரசு காட்டமாக தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், மத நிந்தனை என்ற போலி குற்றச்சாட்டின் ஹிந்துக்கள் மீது வங்கதேசத்தில் தாக்குதல் நடத்தப்படுவதாக வங்கதேச சிறுபான்மையினருக்கான மனித உரிமைகள் காங்கிரஸ் (பிஸிசிங்விவி) பகீர் தகவலை வெளியிட்டுள்ளது. சிறுபான்மையினரை துன்புறுத்துவதற்கும், அவர்களின் சொத்துக்களை பறிக்கவும் இந்த விவகாரத்தை பயன்படுத்திக் கொள்வதாக தெரிவித்துள்ளது.

மேலும் கூறியதாவது; கடந்த ஜூன் மாதம் முதல் டிசம்பர் வரையில் வங்கதேசத்தின் 32 மாவட்டங்களில் 72 போலி மத நிந்தனை வழக்குகள் பதிவாகியுள்ளன. இவையனைத்தும் சிறுபான்மையினரை இலக்காக வைத்தே நடத்தப்பட்ட தாக்குதல்களாகும். தனிப்பட்ட பகையை பழிதீர்க்கவோ, நிலம் மற்றும் பிற சொத்துக்கள் தொடர்பாக பிரச்னைகளை திசைதிருப்பவோ மத நிந்தனை குற்றச்சாட்டுகளை, ஹிந்துக்கள் உள்ளிட்ட சிறுபான்மையினர் மீது ஒரு ஆயுதமாக பயன்படுத்தப்பட்டுள்ளன.

வங்கதேசத்தில் ஷேக் ஹசினாவின் ஆட்சி கவிழ்ந்ததற்கு பிறகு, ஹிந்துக்களுக்கு பாதுகாப்பில்லாத சூழல் நிலவி வருகிறது. இந்தாண்டின் முதல் 6 மாதங்களில் மட்டும் 27 கொலைகள் மற்றும் பல கோவில்கள் மீது தாக்குதல்கள் என மொத்தம் 258 வன்முறைத் தாக்குதல்கள் பதிவாகியுள்ளன. இந்த விவகாரத்தில் அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கத் தவறினால் சிறுபான்மையின மக்களிடையே மேலும் அச்சம் அதிகரிக்கும். சிறுபான்மையினர் மீதான தாக்குதல் விவகாரத்தில் வங்கதேச அரசு கண்டிப்பை வெளிப்படுத்தினாலும், இது போதுமான நடவடிக்கையாக இல்லை, எனக் குறிப்பிட்டுள்ளது.

# வெடிகுண்டு செயலிழப்பு அமைப்புக்கு தர நிர்ணயம்; உருவாக்கியது மத்திய அரசு

புதுடில்லி, டிச.28-

உள்நாட்டில் தயாரிக்கும் வெடிகுண்டு செயலிழப்பு அமைப்புகளுக்கு தர நிர்ணயத்தை மத்திய அரசு உருவாக்கியுள்ளது.

பல்வேறு காரணங்களால், இந்திய ராணுவத்தினர், துணை ராணுவப்படைகள் மற்றும் மாநில போலீசார் கண்ணிவெடி, வெடிக்காத குண்டுகள் உள்ளிட்டவற்றை கையாள வேண்டிய நிகழ்வுகள் அடிக்கடி ஏற்படுகின்றன. இதுபோன்ற சூழல்களை கையாள்வதற்கு உரிய வழிமுறைகளை வகுக்கப்பட வேண்டியது அவசியமாக இருந்தது. இதற்கென 3 வகையான வெடிகுண்டு செயலிழப்பு அமைப்புகளை இந்திய பாதுகாப்பு படையினர் பயன்படுத்தி வருகின்றனர்.

இவற்றை பல்வேறு தனியார் மற்றும் அரசு பொதுத்துறை நிறுவனங்கள் வெடிகுண்டு செயலிழப்பு அமைப்புகளை தயாரித்து வந்தன. இவற்றுக்கான தர நிர்ணயம் என்பது இதுவரை இல்லாமல் இருந்தது. இந்த சூழலில், மத்திய உள்துறை அமைச்சகம் மற்றும் டெர்மினல் பாலிஸ்டிக் ஆராய்ச்சி ஆய்வகத்தின் கோரிக்கையின் பேரில் உருவாக்கப்பட்ட இந்தத் தரத்தை 'மிஷி 19445:2025' என்று அழைக்கப்படுகிறது. சர்வதேச அளவில் பாராட்டப்படக் கூடிய அளவில் இந்தத் தரம் உருவாக்கப்பட்டுள்ளது.

இது குறித்து நுகர்வோர் விவகாரத்துறை செயலாளர் நிதி காரே கூறியதாவது; அரசு கொள்முதல் நிறுவனங்கள், உற்பத்தியாளர்கள் மற்றும் சோதனை நிறுவனங்களின் பயன்பாட்டிற்காக இந்தத் தரம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தத் தர நிர்ணயத்தின் மூலம் தரமான பொருள் உற்பத்தியை ஊக்குவிக்க முடியும். குறிப்பாக, முக்கிய பாதுகாப்பு பணிகளின் போது குண்டு செயலிழப்பு அமைப்புகள் மீது நம்பிக்கையை அதிகரிக்கும். இது உள்நாட்டு உற்பத்தியாளர்களின் தரத்தை மேம்படுத்தவும், சர்வதேச அளவில் போட்டியிடவும் உதவும், எனக் கூறியிருந்தார்.இது குறித்து பாதுகாப்புத்துறை அமைச்சகம் கூறுகையில், 'தற்போது இருக்கும் சர்வதேச தயாரிப்புகளை பயன்படுத்துவது மிக எளிதானதல்ல. இந்திய ராணுவத்தினர் எதிர்கொள்ளும் அச்சுறுத்தல்கள் மற்றும் செயல்பாடுகளுக்கு முழுமையாக பொருந்தாதவையாக உள்ளன,' எனத் தெரிவித்துள்ளது. உள்நாட்டில் தயாரிக்கும் வெடிகுண்டு செயலிழப்பு அமைப்புக்கு தர நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதால், இது இந்தியாவின் பாதுகாப்புத்துறைக்கு பலம் சேர்ப்பதாக அமைந்துள்ளது





# கண்டரமாணிக்கத்தில் சிறப்பு மருத்துவ முகாம் : அமைச்சர் பெரிய கருப்பன், மாவட்ட ஆட்சியர் பொற்கொடி பங்கேற்பு

கல்லல் டிச28-

சிவகங்கை மாவட்டம் கல்லல் வட்டாரம் கண்டரமாணிக்கம் சேது ஐராணி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் நலம் காக்கும் சிறப்பு மருத்துவ முகாம் நேற்று டிசம்பர் 28 கூட்டுறவுத்துறைவு அமைச்சர் மற்றும் மாவட்ட ஆட்சியர் பொற்கொடி முன்னிலையில் சிறப்பாக நடைபெற்றது. இம்முகாமில் 17 சிறப்பு மருத்துவ துறைகள் மூலம் இலவசமாக மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டது. இங்கு ரத்த பரிசோதனை, இசிஜி உள்ளிட்ட பரிசோதனை இலவசமாக வழங்கப்பட்டது. பொது மருத்துவம், கண், காது, மூக்கு, தொண்டை, பல், எலும்பு, நரம்பியல், மனநல மருத்துவம், சர்க்கரை நோய், நுரையீரல் சிகிச்சை அளிக்கப்பட்டது. டாக்டர்கள் பரிந்துரைப்படி




எக்கோ , எக்ஸ்ரே ஸ்கேன் எடுக்கப்பட்டது.

இம்முகாமில் ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி, சிவகங்கை மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் பாலதண்டாயுதபாணி மற்றும் உதவித்திட்ட அலுவலர் பீட்டர் லெமாயு ஆகியோரின் வழி காட்டுதல்படிமாற்றுத்திறன் மாணவர்களுக்கு மருத்துவ முகாம் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு, மாற்றுத்திறன் மாணவர்களுக்கு 1.தேசிய அடையாள அட்டை 72. தனித்துவம் வாய்ந்த அட்டை73.மறு மதிப்பீட்டு அட்டை3.4.இலவச பேருந்து பயண அட்டை95.இலவச ரயில் பயண அட்டை8.6.உதவி உபகரணங்கள் 7.6.மாதாந்திர உதவித்தொகை 5 பெற்று வழங்கப்பட்டது. இம்முகாமை

தேவகோட்டை மாவட்ட கல்வி அலுவலர் செந்தில் குமார்,கல்லல் வட்டார கல்வி அலுவலர் கோதை, மாவட்ட ஒருங்கி ணைப்பாளர் திருமதி.ஜெஸிமா பேகம்ஆகியோர் பார்வையிட்டனர்இம்மருத்துவ முகாமிற்கான ஏற்பாடுகளை கல்லல் வட்டார வள மைய மேற்பார்வையாளர்

கா.சங்கீதா ,வட்டார ஒருங்கிணைப்பாளர் திருமதி கு. தனலெட்சுமி, ஆசிரியர் பயிற்றுநர்கள் மும்தாஜ் பேகம், சசிகலா ,சிறப்பு ஆசிரியர்கள் முருகானந்தம், எப்சிபா,ஜெமி, இயன்முறை மருத்துவர் பானுஏற்பாடு செய்தனர். இம்மருத்துவ முகாமில் பங்கேற்கும் மாற்றுத்திறனாளி மாணவர்கள் மற்றும் அவர்தம் பெற்றறோர்களுக்கு போக்குவரத்து வசதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மதிய உணவு, தேநீர், போக்குவரத்து பயணப்படி மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. இம்மருத்துவ முகாம் மாற்றுத்திற னாளி மாணவர்களுக்கு மிகுந்த பயனுள்ளதாக அமைந்தது

# வைகுண்ட ஏகாதசி 2025 : பெருமாளின் அருளைப் பெற இந்த 5 விஷயங்களை மட்டும் பண்ணுங்க



வைகுண்ட ஏகாதசி என்பது பெருமாளின் அருளை பெறுவதற்கு மிகவும் ஏற்ற நாளாகும். இந்த நாளில் சில குறிப்பிட்ட எளிமையான பரிகாரங்களை வீட்டில் இருந்த படியே செய்வதால் பெருமாளின் பரிபூரணமான அருளை பெற முடியும். வைகுண்ட ஏகாதசியன்று குறிப்பிட்ட இந்த 5 விஷயங்களை செய்வதால் அளவில்லாத நன்மைகளும், செல்வ செழிப்பும் ஏற்படும் என்பது நம்பிக்கை.

2025ஆம் ஆண்டின் இறுதி ஏகாதசியாக வைகுண்ட ஏகாதசி அமைந்துள்ளது. வருடத்தில் வரும் மிக முக்கியமான ஏகாதசிகளில் ஒன்றான மார்கழி மாத வளர்பிறை ஏகாதசியான வைகுண்ட ஏகாதசி இந்த ஆண்டு டிசம்பர் 30 ம் தேதி செவ்வாய்கிழமை அமைந்துள்ளது. 2025ம் ஆண்டின் துவக்கத்தில் ஏற்கனவே ஒரு வைகுண்ட ஏகாதசி நிறைவடைந்து விட்ட நிலையில், இந்த ஆண்டின் இறுதியாகவும் மற்றொரு வைகுண்ட ஏகாதசி விரத நாள் அமைந்துள்ளது. இந்த ஏகாதசி'புத்ரதா ஏகாதசி' என்றும் அழைக்கப்படுகிறது.

மற்ற மாதங்களில் வரும் ஏகாதசிகளில் விரதம் இருந்து, பெருமாளை வழிபட முடியாவிட்டாலும் மார்கழி மாதத்தில் வரும் வைகுண்ட ஏகாதசி அன்று இரவு முழுவதும் கண் விழிப்பு, உபவாசமாக இருந்து, பெருமாளின் திருநாமங்களைச் சொல்லிக் கொண்டே இருப்பதால் பாவங்கள் நீங்கி, புண்ணியங்கள் அதிகரிக்கும். அதோடு வேண்டிய வரங்களும், குடும்பத்தில் செல்வ செழிப்பும், வைகுண்ட பதவியும் கிடைக்கும் என்பது நம்பிக்கை. இந்த நாளில் இரவு முழுவதும் கண் விழித்தும், உபவாசம் இருந்து விரதம் இருக்க முடியாதவர்கள், மிக எளிமையான முறையில், பக்தியுடன் பெருமாளை வழிபட்டால், பெருமாளின் அருள் முழுவதுமாக கிடைக்கும்.

வைகுண்ட ஏகாதசி அன்று செய்ய வேண்டிய 5 விஷயங்கள் :

1. மகாவிஷ்ணுவிற்கு பஞ்சாமிர்த அபிஷேகம்
வைகுண்ட ஏகாதசி அன்று வீட்டில் உள்ள மகாவிஷ்ணுவின் சிலை அல்லது ஏதாவது பெருமாளின் ஏதாவது ஒரு உருவ சிலைக்கு பஞ்சாமிர்தம் (பால், தயிர், நெய், தேன், சர்க்கரை) கொண்டு அபிஷேகம் செய்வது மிகவும் விசேஷம். அப்படி சிலை இல்லாதவர்கள் பெருமாளுக்கு இந்த பஞ்சாமிர்தத்தை நைவேத்தியமாக படைத்து வழிபடலாம். இது தொழிலில் உள்ள தடைகளை நீக்கி, முன்னேற்றத்திற்கான புதிய வாய்ப்புகளைத் தரும்.

2. வெற்றிலையில் மந்திரம் எழுதி சமர்ப்பித்தல் ஒரு வெற்றிலையில் 'ஓம் விஷ்ணவே நமஹ' என்று எழுதி, அதை பகவான் விஷ்ணுவின் பாதங்களில் வைத்து வழிபடவும். பூஜைக்குப் பிறகு அந்த வெற்றிலையை உங்கள் பணப்பெட்டி அல்லது பீரோவில் வைத்தால் பொருளாதார வளர்ச்சி ஏற்படும் என்பது நம்பிக்கை.

3. பசுவிற்கு உணவிடுதல் மகாவிஷ்ணுவிற்கு வாழைப்பழம் படைத்து வழிபட்டு விட்டு, பின்னர் பசு மாட்டிற்கு நெய் தடவிய ரொட்டி மற்றும் வெல்லம் வழங்கவும். இது உங்கள் குழந்தைகளின் வாழ்வில் மகிழ்ச்சியையும் ஆரோக்கியத்தையும் அதிகரிக்கும்.

4. துளசி வழிபாடு மற்றும் நெய் தீபம் வைகுண்ட ஏகாதசி அன்று மாலை துளசி செடிக்கு அருகில் நெய் தீபம் ஏற்றி, துளசி செடியை 7 முறை வலம் வர வேண்டும். துளசி இலைகளின் மீது 'ஸ்ரீ' என்று எழுதி மகாவிஷ்ணுவிற்கு அர்ப்பணிப்பது வீட்டில் செல்வச் செழிப்பை உண்டாக்கும். பெருமாளுக்கு இந்த நாளில் துளசியால் அர்ச்சனை செய்வதும், துளசியால் மாலை கட்டி போடுவதும் மிகவும் சிறப்பானதாகும். இதனால் பெருமாளின் அருளுடன் மகாலட்சுமியின் அருளும் கிடைக்கும்.

5. அரச மரத்தடியில் தீபம் ஏற்றுதல் மாலையில் அரச மரத்தடியில் நல்லெண்ணெய் அல்லது கடுகு எண்ணெய் தீபம் ஏற்றி, 'ஓம் நமோ நாராயணாய' என்ற மந்திரத்தை உச்சரிக்கவும். இது உங்கள் வாழ்வில் நேர்மறை மாற்றங்களைக் கொண்டு வந்து மன அமைதியைத் தரும்.

# பூஜை அறையில் ஏற்றுவதற்கு நெய் விளக்கு Vs எண்ணெய் விளக்கு – எது மிகவும் சக்தி வாய்ந்தது?



வீட்டில் சாதாரணமாக வழிபடுவதை விட விளக்கேற்றி வைத்து வழிபடுவது அதிக சிறப்பு வாய்ந்தது ஆகும். இது தெய்வீக சக்தியை அதிகம் ஈர்க்கும் தன்மை கொண்டதாகும். வீட்டில் விளக்கேற்றி வைத்து வழிபடும் போது எந்த மாதிரியான விளக்கை ஏற்றி வழிபட்டால், என்னென்ன பலன்கள் கிடைக்கும் என்பதை தெரிந்து கொள்ளலாம்.

பூஜை என்றாலே விளக்கு இல்லாமல் முழுமையடையாது. பழங்காலம் முதல் இன்று வரை தீபம் ஏற்றுவது இந்து வழிபாட்டின் அடையாளமாகவே இருந்து வருகிறது. விளக்கு என்பது ஒளி மட்டுமல்ல அது ஆன்ம ஒளி. ஒரு விளக்கு நான்கு அம்சங்களால் உருவாகிறது. அதாவது, அகல் ஸ்ரீ அறம், எண்ணெய் / நெய் ஸ்ரீ பொருள், திரி ஸ்ரீ இன்பம், சுடர் ஸ்ரீ வீடு (மோட்சம்). இவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற ஆன்மீக பாதைகளையும் குறிக்கின்றன.

நெய் / எண்ணெய் உணர்வுகள்
திரி ஆன்மா
சுடர் ஆன்ம ஒளி

அதனால்தான், விளக்கு ஏற்றுவது ஆண்டவனுக்கும் ஆன்மாவுக்கும் இடையிலான பந்தத்தை உணர்த்துகிறது. விளக்கேற்றி வழிபடுவதே சிறப்பானத தான் என்றாலும், அந்த விளக்கு ஏற்ற பயன்படுத்தும் பொருட்களுக்கு ஏற்ப அதற்கான பலன்களும் மாறுபடுவதாக சொல்லப்படுகிறது.

நெய் விளக்கு ஸ்ரீ ஏன் சிறப்பு?

இந்து தர்மத்தில் நெய் தீபம் மிகவும் புனிதமானதாக கருதப்படுகிறது. அனைத்து தெய்வங்களுக்கும் நெய் விளக்கு ஏற்றலாம். இதனால் தேவர்கள் மகிழ்ச்சி அடைவார்கள். பொருளாதார தடைகள் விலகும், வீட்டில் பணப் பஞ்சம் நீங்கும். மகாலட்சுமி அருள் பெற நெய் விளக்கு மிகவும் உகந்தது.

எண்ணெய் விளக்கு ஸ்ரீ எப்போது, எதற்கு?

எண்ணெய் விளக்குகளும் சக்தி குறைந்தவை அல்ல. எண்ணெய் விளக்கு பொதுவாக அம்மன் வழிபாட்டிற்கு அதிகம் பயன்படுத்தப்படுகிறது.

கடுகு எண்ணெய் பைரவர் வழிபாடு, சனி பகவான் தோஷ நிவாரணம், எதிரிகளிடமிருந்து பாதுகாப்பு, கணவரின் நீண்ட ஆயுள் ஆகியவற்றிற்கு பயன்படுத்தலாம்.

எள் எண்ணெய் சனி தோஷம், கர்ம வினை குறைதல் ஆகியவற்றிற்கு ஏற்றலாம்.

ஆமணக்கு எண்ணெய், ராகு ஸ்ரீ கேது தோஷ நிவாரணத்திற்காக ஏற்றலாம்.

நல்லெண்ணெய் அனைத்து கோயில்களிலும் பொதுவாக ஏற்றலாம்.

சிறப்பு தீப வழிபாடுகள் :

அனுமன் அருள் பெற முப்புரி தீபம்

வாராஹி தேவி வழிபாடு பசும் நெய், நல்லெண்ணெய், வேப்பெண்ணெய், இலுப்பை எண்ணெய், தேங்காய் எண்ணெய் ஆகிய ஐந்தையும் கலந்து ஏற்றலாம்.பஞ்ச தீப எண்ணெய், ஐந்து முக தீபம் பஞ்சமி திதியில் ஏற்றி வழிபட்டால் சிறப்பு.

விளக்கேற்றும் திசைகள் - பலன்கள் :

மேற்கு நோக்கி பொருளாதாரம் உயரும், கடன் தொல்லை நீங்கும்

வடக்கு நோக்கி திருமணத் தடைகள் விலகும்

கிழக்கு நோக்கி துன்பங்கள் நீங்கும்

ஐந்து முக விளக்கு கடன் - நிதி பிரச்னை தீர்வு

இலவம் பஞ்சால் திரி சகல பாக்கியங்களும் கிடைக்கும்.

விளக்கேற்ற வேண்டிய சிறந்த நேரம் :

அதிகாலை பிரம்ம முகூர்த்தத்தில் ஏற்றினால் சர்வ மங்கலம் தரும்

மாலை 6 மணிக்கு விளக்கேற்றினால் மகாலட்சுமி அருள், குடும்ப சுகம், புத்திர பாக்கியம் கிடைக்கும்.

விளக்கிற்கு பால், கல்கண்டு நிவேதனம் வைத்து வழிபட்டால் நன்மைகள் பெருகும்.

# கருண் நாயர், படிக்கல் சதம்: கர்நாடக அணிக்கு சிறப்பான வெற்றி



விஜய் ஹசாரே கோப்பைக்கான போட்டியில் கர்நாடக அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் கேரளாவை வீழ்த்தி சிறப்பான வெற்றியைப் பதிவு செய்தது. கர்நாடக அணி வீரர்கள் கருண் நாயர், தேவ்தத் படிக்கல் ஆகியோர் அபாரமாக விளையாடி சதமடித்தனர்.

இந்தப் போட்டி அகமதாபாத்திலுள்ள நரேந்திர மோடி மைதானத்தில் நேற்று நடைபெற்றது.

முதலில் விளையாடிய கேரள அணி 50 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 284 ரன்கள் குவித்தது. கேரள அணியின் அபராஜித் 71 ரன்கள் குவித்தார்.

பின்னர் விளையாடிய கர்நாடக அணி 48.2 ஓவர்களில் 2 விக்கெட் இழப்புக்கு 285 ரன்கள் குவித்து வென்றது. தேவ்தத் படிக்கல் 137 பந்துகளில் 127 ரன்கள் குவித்து அவுட்டானார். கருண் நாயர் 130, ஸ்மரன் ரவிச்சந்திரன் 25 ரன்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தனர். இதன்மூலம் 8 விக்கெட் வித்தியாசத்தில் கர்நாடக அணி வெற்றி கண்டது.

இதர ஆட்டங்கள்: இதர ஆட்டங்களில் கோவா அணி 8 ரன்கள் வித்தியாசத்தில இமாச்சல பிரதேச அணியையும், பஞ்சாப் அணி 9 விக்கெட்கள் வித்தியாசத்தில் சத்தீஸ்கர்

அணியை தோற்கடித்தது. ஹரியானா அணி 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் சவுராஷ்டிரா அணியையும், ஆந்திர அணி 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் ரயில்வேஸையும், மத்திய பிரதேச அணி 2 விக்கெட் வித்தியாசத்தில் தமிழ்நாடு அணியையும், ஜம்முகாஷ்மீர் அணி 142 ரன்கள் வித்தியாசத்தில் அசாம் அணியையும் வென்றன.

விஜய் ஹசாரே கோப்பை: உத்தராகண்டை வீழ்த்தியது மும்பை

# விஜய் ஹசாரே கோப்பை: உத்தராகண்டை வீழ்த்தியது மும்பை



விஜய் ஹசாரே கோப்பைக்கான கிரிக்கெட் போட்டியில் மும்பை அணி 51 ரன்கள் வித்தியாசத்தில் உத்தராகண்ட் அணியை வீழ்த்தியது.

நாடு முழுவதும் பல்வேறு மைதானங்களில் விஜய் ஹசாரே கோப்பைக்கான கிரிக்கெட் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. நேற்று ஜெய்ப்பூரிலுள்ள சவாய் மான்சிங் மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் மும்பை, உத்தராகண்ட் அணிகள் மோதின.

முதலில் விளையாடிய மும்பை அணி 50 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 331 ரன்கள் குவித்தது. அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக ரோஹித் சர்மா, அங்கிரிஷ் ரகுவன்ஷி களமிறங்கினர். இதற்கு முந்தைய போட்டியில் ரோஹித் சர்மா சிறப்பாக விளையாடி 155 ரன்கள் குவித்திருந்தார். ஆனால், நேற்றைய போட்டியில் தான் சந்தித்த முதல் பந்திலேயே ஆட்டமிழந்தார் ரோஹித்.

அங்கிரிஷ் ரகுவன்ஷி 11, முஷீர் கான் 55, சர்பிராஸ் கான் 55, லாட் 21, ஷர்துல் தாக்குர் 29, ஷம்ஸ் முலானி 48 ரன்கள் குவித்தனர். விக்கெட் கீப்பர் ஹர்திக் தாமோர் 82 பந்துகளில் அதிரடியாக 93 ரன்களைக் குவித்தார். உத்தராகண்டின் தேவேந்திர சிங் போரா 3 விக்கெட்களை கைப்பற்றினார்.

பின்னர் 332 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் விளையாடிய உத்தராகண்ட் அணி, 50 ஓவர்களில் 9 விக்கெட் இழப்புக்கு 280 ரன்கள் எடுத்து தோல்வி கண்டது. அந்த அணியின் யுவராஜ் சவுத்ரி 96, குணால் சண்டேலா 32, ஜெகதீஷா சுஜித் 51 ரன்கள் எடுத்தனர்.

இதையடுத்து 31 ரன்கள் வித்தியாசத்தில் மும்பை அணி வெற்றி கண்டது. மும்பை அணி சார்பில் ஷர்துல் தாக்குர், ஓன்கார் துகாராம் தமாலா, முஷீர் கான் ஆகியோர் தலா 2 விக்கெட்களைக் கைப்பற்றினர்.



# ஆஸ்திரேலியாவில் 15 ஆண்டுகளுக்கு பின்னர் முதல் முறையாக டெஸ்ட் கிரிக்கெட்டில் இங்கிலாந்து வெற்றி

நடப்பு ஆஷஸ் டெஸ்ட் கிரிக்கெட் தொடரின் நான்காவது போட்டியில் அணி 4 விக்கெட்டுகளில் வெற்றி பெற்றது. இது ஆஸ்திரேலியாவில் 15 ஆண்டுகளுக்கு பின்னர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து அணியின் முதல் வெற்றியாக அமைந்தது குறிப்பிடத்தக்கது.

175 ரன்கள் என்ற இலக்கை வெற்றிகரமாக எட்டியது பென் ஸ்டோக்ஸ் தலைமையிலான இங்கிலாந்து அணி. கடைசியாக கடந்த 2011 ஜனவரியில் ஆஸ்திரேலியாவின் சிட்னியில் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றது. அதன் பின்னர் இப்போதுதான் சுமார் 5,468 நாட்களுக்கு பிறகு இங்கிலாந்து அணி, ஆஸ்திரேலியாவில் டெஸ்ட் போட்டியில் வெற்றி பெற்றுள்ளது. இதற்கு இடைப்பட்ட காலத்தில் 18 டெஸ்ட் போட்டிகளில் 16 தோல்வி மற்றும் 2 போட்டிகளை டிரா செய்துள்ளது இங்கிலாந்து.

மெல்பர்னில் ‘பாக்சிங் டே’ டெஸ்ட் போட்டியாக அமைந்த இந்த ஆட்டத்தின் முதல் இன்னிங்ஸில் ஆஸ்திரேலிய அணி 152 ரன்கள் எடுத்தது. இங்கிலாந்து அணி 110 ரன்கள் எடுத்தது. 42 ரன்கள் முன்னிலையுடன் ஆஸ்திரேலியா இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கியது. ஆஸ்திரேலியா 132 ரன்களுக்கு ஆட்டமிழந்தது. இதன் மூலம் 175 ரன்கள் என்ற இலக்கை இங்கிலாந்து விரட்டியது.

32.2 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 178 ரன்கள் எடுத்து இங்கிலாந்து அணி வெற்றி பெற்றது. இங்கிலாந்து தரப்பில் அதிகபட்சமாக ஜேக்கப் பெத்தேல் 40 ரன்கள் எடுத்திருந்தார். கிராவ்லி 37, டக்கெட் 34 ரன்கள் எடுத்தனர்.

இரண்டு நாட்களில் முடிந்த ஆட்டம்: மெல்பர்னில் நடந்த இந்த ஆட்டம் இரண்டு நாட்களில் முடிந்தது. முதல் நாளில் 20 விக்கெட் மற்றும் இரண்டாம் நாளில் 16 விக்கெட் என மொத்தமாக 36 விக்கெட்டுகள் இரண்டு நாட்களில் சரிந்தது. இதனால் ஆடுகளம் குறித்த விவாதம் இப்பொழுது எழுந்துள்ளது.



# ‘ஜனநாயகன்’ படத்தில் விஜய் பாடிய ‘செல்ல மகளே...’ பாடல் எப்படி?

விஜய் நடிப்பில் வெளியாகவுள்ள ‘ஜனநாயகன்’ படத்தின் 3வது சிங்கிளான 'செல்ல மகளே...' பாடல் இன்று (டிச.26) வெளியாகி தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது.

கே.வி.என் நிறுவனம் தயாரிப்பில் உருவாகி வரும் படம் ‘ஜனநாயகன்’. விஜய், பூஜா ஹெக்டே, பாபி தியோல், கௌதம் மேனன், ப்ரியாமணி, நரேன், மமிதா பைஜு உள்ளிட்ட பலர் நடித்துள்ள இப்படத்தை ஹெச்.வினோத் இயக்கியுள்ளார். அனிருத் இசையமைத்துள்ளார்.

விஜய் தீவிர அரசியல் களம் கண்டுள்ள நிலையில், இது அவர் நடிக்கும் கடைசி படம் எனக் கூறப்படுகிறது. இதனால் இப்படத்தின் மீதான ஆர்வம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. சமீபத்தில் இப்படத்தின் பாடல்களான ‘தளபதி கச்சேரி’, 'ஒரே பேரே வரலாறு' ஆகியவை அவரது ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது.

இந்த நிலையில், ‘ஜனநாயகன்’ படத்தின் 3வது பாடல் 'செல்ல மகளே...' இன்று (டிச.26) வெளியாகி உள்ளது. பாடலாசிரியர் விவேக் இப்பாடலை எழுதியுள்ள நிலையில், விஜய் இந்தப் பாடலை பாடியுள்ளார். ‘கண்ணே மணியே கண்ணிமையே... என் கைக்குள்ள மலர்ந்தவளே...’ என ஒரு தந்தை தனது மகளுக்காக மனமுருகி பாடியுள்ள விதத்தில் சா∴ப்ட் டோனில் இந்த வரிகள் அமைந்துள்ளது.

மேலும், ‘எந்தன் நெஞ்சில் குடியிருக்கும் நான் ஈன்றாத ...’ என விஜய்யின் அரசியல் டேக் லைனுடன் இப்பாடல் முடிகிறது. விஜய் மனமுருகி பாடியிருப்பதாக அவரது ரசிகர்கள் கொண்டாடி வருகின்றனர்.

# ‘கர்மா’ குறித்து எனக்கு பாடம் கற்பிக்க வேண்டாம் நடிகர் விநாயகன் கோபம்

மலையாள நடிகர் விநாயகன் ‘ஆடு 3’ என்ற படத்தில் நடித்து வருகிறார். இதன் படப்பிடிப்பு திருச்செந்தூரில் நடந்தபோது, சண்டைக்காட்சியில் அவருக்கு காயம் ஏற்பட்டு கழுத்து நரம்பு பாதிக்கப்பட்டது. கொச்சியில் உள்ள மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கப்பட்ட அவருக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது. சிகிச்சைக்குப் பின் கடந்த புதன்கிழமை வீடு திரும்பினார். மருத்துவர்கள் அவரை 2 வார காலம் ஓய்வெடுக்கும்படி அறிவுறுத்தி உள்ளனர்.

இந்நிலையில் அவர் காயமடைந்ததை சமூக வலைதளங்களில் சிலர் விமர்சித்தனர். இது கர்மாவின் வினை என்று சிலர் கூறியிருந்தனர். இதற்குப் பதிலளித்து பேஸ்புக்கில் விநாயகன் வெளியிட்ட பதிவில், “உங்களைப் போல மோசமான செயல்களைச் செய்யும் போது இந்தக் காயம் ஏற்படவில்லை. அறிவாளிகள் போல் நடித்து, அறிவில்லாதவர்களை நம்பி வேலை செய்தபோது இது நடந்தது. விநாயகன் வாழ்ந்தாலும் இறந்தாலும் இந்த உலகில் எதுவும் மாறாது. ‘கர்மா’ குறித்து எனக்கு பாடம் கற்பிக்கத் தேவையில்லை.

விநாயகன் தனது சொந்த கர்மாவின் பலனை எதிர்கொள்வார். உங்கள் சாபங்களையும் போலி அனுதாபங்களையும் என்னிடமிருந்து விலக்கி வையுங்கள். விநாயகன் திமிர்பிடித்தவன் அல்ல; சுயமரியாதை கொண்ட மனிதன். காலமே என்னைக் கொல்லும் வரை, நான் பேசிக்கொண்டே இருப்பேன். ஜெய் ஹிந்த், கிறிஸ்துமஸ் வாழ்த்துகள்” என்று கூறியுள்ளார்.





# ‘கூலி’ மீதான விமர்சனங்கள்: லோகேஷ் கனகராஜ் ஓபன் டாக்

’கூலி’ படத்தின் மீதான விமர்சனங்கள் குறித்து லோகேஷ் கனகராஜ் பேட்டியளித்துள்ளார்.

பா.இரஞ்சித்தின் ‘மார்கழியில் மக்களிசை’ அறிமுக விழா சென்னையில் நடைபெற்றது. இதில் கனிமொழி எம்.பி, லோகேஷ் கனகராஜ், ஜி.வி.பிரகாஷ் உள்ளிட்ட பலர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டார்கள். அந்த நிகழ்வு முடிந்து கிளம்பும்போது பத்திரிகையாளர்கள் மத்தியில் பேசினார் இயக்குநர் லோகேஷ் கனகராஜ்.

அதில், “’கூலி’ முடிந்தவுடன் எந்தவொரு பேட்டியும் கொடுக்கவில்லை. ஏனென்றால் அடுத்த படத்தின் வேலைகளில் இருந்தேன். எனக்குமே மக்களுக்கு நன்றி தெரிவிப்பதற்கு ஒரு சரியான மேடை கிடைக்கவில்லை. ’கூலி’ படத்தின் மீது 1000 விமர்சனங்கள் இருந்தது. மக்களுக்கு படங்களை கொடுக்கும் போது, அதற்கு வரும் விமர்சனங்களை ஏற்றுக் கொள்ள தான் வேண்டும்.

நானும் அந்த விமர்சனங்களை எடுத்துக் கொண்டு, அடுத்த படத்தில் அதனை தவிர்ப்பதற்கான பணிகளில் தான் ஈடுபடப் போகிறேன். அனைத்து விமர்சனங்களையும் கடந்து ரஜினி சாருக்காக மக்கள் திரையரங்கில் போய் படத்தைப் பார்த்தார்கள். தயாரிப்பாளரிடம் கேட்டபோது அப்படம் ரூ.500 கோடி வசூல் செய்ததாக தெரிவித்தார்.

அதற்குக் காரணமான மக்களுக்கு நன்றி. அதற்கு உறுதுணையாக இருந்த அனைத்து தரப்பினருக்கும் நன்றி. எனது அடுத்த படம் குறித்து தயாரிப்பு நிறுவனம் விரைவில் அறிவிக்கும்” என்று தெரிவித்துள்ளார்.

லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் ரஜினி, சத்யராஜ், நாகார்ஜுனா, ஸ்ருதிஹாசன் உள்ளிட்ட பலர் நடிப்பில் வெளியான படம் ‘கூலி’. சன் பிக்சர்ஸ் தயாரிப்பில் வெளியான இப்படம் கடுமையாக விமர்சிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.



## சிவகங்கை நகர் 15 வது வார்டு வாக்குச்சாவடி ஆலோசனை கூட்டம்மாவட்ட வர்த்தக அணி தனசேகரன் ஏற்பாடு , நசெ. சேர்மன் சி. எம். துரை ஆனந்த் பங்கேற்பு

சிவகங்கை டிச28-

சிவகங்கை நகர் 15 வது வட்டக்கழக திமுக சார்பில் வட்டக்கழக செயலாளர், திமுக வர்த்தக அணி மாவட்ட துணைத்தலைவர் தனசேகரன் ஏற்பாட்டில் நடைபெற்ற வெற்றி வாக்குச்சாவடி ஆலோசனை கூட்டத்தில் நகர செயலாளர், நகர்மன்றத் தலைவர் சி. எம். துரை ஆனந்த் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கி சிறப்பித்தார்.மேலும் சேர்மன் துரை ஆனந்த் ஆங்கிலப் புத்தாண்டு நாட்காட்டிகளை பொதுமக்கள் மற்றும் கழக நிர்வாகிகள் அனைவருக்கும் வழங்கி புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்தார்.இந்த நிகழ்ச்சியில் கழக மூத்த முன்னோடிகளான மாவட்ட திமுக செய்தித் தொடர்பாளர் , கவுன்சிலர் அயூப் கான் , மாவட்ட பிரதிநிதி சுப. ஜெயகாந்தன்,துணைச் செயலாளர் ஆறு. சரவணன்,நாகநாதர் நாச்சியப்பன் , வட்டக்கழக பொருளாளர் முருகேசன் , நகர் இலக்கிய அணி தமிழரசன் , சிபி.அதியமான் , நகர் சுற்றுச்சூழல் அணி சுப. ஜெயக்குமார் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்...



■ செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் கழகத் தலைவர் அவர்களின் அறிவுத்தலின்படி என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி பாக நிலை முகவர்கள் தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் கூட்டம் 49வது வார்டு பாகம் எண் 84 BLA2 இ. நவீன்குமார் அவர்களின் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது இதில் சிறப்பு அழைப்பாளராக 4வது மண்டல குழு தலைவர் பகுதி கழக செயலாளர் டி.காமராஜ் அவர்கள் கலந்து கொண்டு எவ்வாறு பணியாற்ற வேண்டும் என்று ஆலோசனைகளை வழங்கினார் இதில் பகுதி அவைதலைவரும் மாமன்ற உறுப்பினருமான டி.ஆர்.கோபி, BDA BLC, பகுதி துணை செயலாளர்கள் ஜா.ரவிக்குமார், ஆர்..செல்வகுமார், வட்ட கழக நிர்வாகிகள் மற்றும் பாக நிர்வாகிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்



■ செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி உட்பட்ட 55 வது வார்டு பெருங்களத்தூர் அரசினர் மேல் நிலை பள்ளியில் நடைபெற்ற சிறப்பு முகாமில் ஏராளமான மக்கள் கலந்து கொண்டு மனுக்கள் அலுவலர்களிடம் வழங்கினார். இதில் மாமன்ற உறுப்பினர் புகழேந்தி, வார்டு அவைத்தலைவர் கோவிந்தராஜ், வார்டு துணை செயலாளர் கணேசன், இளைஞர் அணி அமைப்பாளர் பரத் மற்றும் அரசு ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.



## வேலூரில், வாக்காளர் சிறப்பு முகாம், மாவட்ட ஆட்சியர் பங்கேற்றுப் பார்வையிட்டார்

வேலூர் டிச28-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, கொணவட்டம், எண்.43, வேலூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கொணவட்டம் அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றுவரும் புதிய வாக்காளர் சேர்க்கை, வாக்காளர் பட்டியல் ஏற்புரைகள் மற்றும் மறுப்புரைகள், முகவரி மாற்றம், திருத்தம் செய்வதற்கான சிறப்பு முகாமைவேலூர் மாவட்ட தேர்தல் அலுவலரும் மற்றும் மாவட்ட ஆட்சியருமான சுப்புலெட்சுமி, பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது வேலூர் சட்டமன்ற தொகுதி வாக்காளர் பதிவு அலுவலரும் / மாநகராட்சி ஆணையாளருமான லெட்சுமணன், போய் சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள் உட்பட பலர் உடனிருந்தார்





## தேவகோட்டை கல்வி வள்ளல் அண்ணாமலை செட்டியாரின் 102 வது பிறந்தநாள் விழா

தேவகோட்டை டிச 28-

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரி நிறுவுநர் அண்ணாமலை செட்டியாரின் 102 வது பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவை கல்லூரித் தலைவர் லெட்சுமணன் செட்டியார் தலைமை ஏற்றுத் தொடங்கி வைத்தார். கல்லூரியின் முதல்வர் பேராசிரியர் நாவுக்கரசு வரவேற்புரை ஆற்றினார். சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் கதிரேசன் அவர்கள் விழாப் பேருரை ஆற்றினார். அவர் தம்



உரையில் தனித்தனியாக வாழும் உயிர்கள் ஆபத்தானவை சான்றாக சிங்கத்தைக் கூறலாம் ஒன்றாகச் சேர்ந்து வாழும் தேனீக்கள் எறும்புகள் ஆகியவை பிறருக்கு பயன்படும் வேலைகளைச் செய்பவையாகும். அதுபோல இங்கே இளைஞர் சக்தியை ஒன்றாகச் சேர்த்து ஒரு நன்மையை ஏற்படுத்த வள்ளல் அண்ணாமலையார் முனைந்திருக்கின்றார் இதனை பாராட்டுவது வரவேற்பது நம் கடமையாகும். கூட்டாண்மை ஒன்றே வெற்றியைத் தரும் எனப் பேசினார். பேராசிரியர்கள் சார்பாக முனைவர் கஸ்தூரிபா தேவசேனா, அலுவலர்கள் சார்பாக அலுவலகக் கண்காணிப்பாளர் சந்திரன் மற்றும் மாணவர்கள் சார்பாக முதுகலை வணிகவியல் துறை மாணவர் ஜெய்னுல் நவித் ஆகியோர் கல்லூரி நிறுவுநருக்கு நன்றி கூறினர். இவ்விழாவில் அழகப்பா பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளுக்கு இடையிலான கல்லூரி நிறுவுநர் நாள் இலக்கியப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு ரொக்கப் பரிசும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. இலக்கியப் போட்டிகளுக்கான ஒட்டுமொத்த சுழற் கேடயத்தை காரைக்குடி அழகப்பா அரசு கலைக் கல்லூரி மாணவர்கள் பெற்றனர். மேலும் நிறுவநரின் நினைவைப் போற்றும் வகையில் கல்லூரியின் அனைத்துத் துறைகளுக்கு இடையிலான வாகை26 கலை விழா போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு சான்றிதழ்களும் கோப்பைகளும் வழங்கப்பட்டன. அனைத்துத் துறைகளுக்கான வெற்றிக் கோப்பையை ஒட்டுமொத்தப் புள்ளிப் பட்டியலில் முதலிடத்தைப் பெற்று ஆங்கிலத் துறை மாணவர்களும் இரண்டாம் இடத்தை தமிழ்த்துறை மாணவர்களும் பெற்றனர். விழாவின் நிறைவில் கல்லூரித் தலைவர் லெட்சுமணன் செட்டியார் ஏற்புரை ஆற்றினார். கல்லூரிப் பொருளர் சேவுகன் நன்றி கூறினார். விழாவில் கல்லூரியின் முன்னாள் முதல்வர்கள் முன்னாள் இந்நாள் பேராசிரியர்கள் அலுவலர்கள் நகரப் பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டனர். இவ்விழாவினை தாவரவியல் துறைத் தலைவர் முனைவர் வீரலட்சுமி தொகுத்து வழங்கினார்.



## தாயமங்கலத்தில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி பரப்புரை

சிவகங்கை, டிச.28-

சிவகங்கை மாவட்டம் இளையான்குடி வடக்கு ஒன்றிய திமுக சார்பில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி பரப்புரை கூட்டம் தாயமங்கலத்தில் சத்தியேந்திரன் தலைமையில் முத்துச்சாமி, மலைச்சாமி, கேசவன், மனோஜ் முன்னிலையில் மானாமதுரை தொகுதி பார்வையாளர் மாநில விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் K.R.N.போஸ் சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில் ஒன்றிய செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சுப.மதியரசன் B.Com மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் காளிமுத்து மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளர் புலிக்குட்டி மாவட்ட பிரதிநிதி சாரதி (எ) சாருஹாசன் மானாமதுரை தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் கி.கண்ணன் MCA ஒன்றிய துணை செயலாளர் சிவனேசன் ஒன்றிய விவசாய அணி அமைப்பாளர் நீலமேகம் ஒன்றிய விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் அஜித் குமார், பாலசுப்பிரமணியன், சுந்தரம், கோபி, கலா உள்ளிட்ட நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



## உலகின் மிக நீளமான சுரங்கப்பாதை; 22 கி.மீ.,க்கு மலையை குடைந்து உருவாக்கியது சீனா

பீஜிங், டிச.28-

சீனாவில், 9,842 அடி உயரத்தில் அமைந்துள்ள உலகின் மிக நீளமான அதிவேக நெடுஞ்சாலை சுரங்கப்பாதை திறக்கப்பட்டுள்ளது.

நம் அண்டை நாடான சீனாவின் ஜின்ஜியாங்கின் உய்குர் பகுதியில், கடல் மட்டத்தில் இருந்து, 9,842 அடி உயரத்தில், உலகின் மிக நீளமான அதிவேக நெடுஞ் சாலை சுரங்கபாதை அமைக்கப்பட்டுள்ளது.

இது வடக்கு மற்றும் தெற்கு ஜின்ஜியாங் பகுதிகளை இணைக்கும் உரும்கி யுலி அதிவேக நெடுஞ் சாலையின் ஒரு பகுதியாகும். மலையைக் குடைந்து அமைக்கப்பட்டுள்ள இந்த சுரங்கப் பாதையின் நீளம் 22.13 கி.மீ., ஆகும்.

இதற்கு முன்பு, தியான்சென் மலைத் தொடரை கடக்க பல மணி நேரம் தேவைப்பட்ட நிலையில், இந்த சுரங்கப்பாதையின் வழியாக வெறும் 20 நிமிடங்களில் கடந்து விட முடியும்.

இது, சீனா முன்னெடுத்துள்ள 'பெல்ட் அண்டு ரோடு' எனப்படும், பல நாடுகளை சாலை வழியாக இணைக்கும் திட்டத்தின் ஒரு முக்கிய அங்கமாகும்

## தாராபுரத்தில் ரூ.19.5 கோடி மதிப்பீட்டில் 650 பேருக்கு இலவச வீட்டுமனை பட்டாஅமைச்சர்கள் சாமிநாதன் மற்றும் கயல்விழி ஆகியோர் வழங்கினர்

தாராபுரம், டிச.28-

திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தில் ரூ.19.5 கோடி மதிப்பீட்டில் 650 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனை பட்டாக்களை தமிழக அரசு சார்பில் அமைச்சர்கள் வழங்கினர்.தாராபுரத்தில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற இலவச வீட்டுமனை பட்டா வழங்கும் விழாவிற்கு வருவாய் கோட்டாட்சியர் (ஆர்டிஓ) பெலிக்ஸ் ராஜா தலைமை தாங்கினார். இந்த விழாவில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் கயல்விழி ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு பயனாளிகளுக்கு பட்டாக்களை வழங்கினர். விழாவில் பேசிய



அமைச்சர் மு.பெ. சாமிநாதன்,“தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு, ஏழை மற்றும் எளிய மக்களுக்கு சொந்த வீடு என்ற கனவை நிறைவேற்றும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. வீடு என்பது வெறும் கட்டிடம் மட்டுமல்ல. அது குடும்பத்திற்கு பாதுகாப்பு, மரியாதை மற்றும் எதிர்கால நம்பிக்கை ஆகும்” என்று தெரிவித்தார்.மேலும் அவர்,“பல ஆண்டுகளாக வீட்டுமனை இல்லாமல் வாடிய மக்களுக்கு, எந்த விதமான பேதமும் இன்றி இலவசமாக வீட்டுமனை பட்டா வழங்கப்பட்டு வருகிறது. அரசின் திட்டங்கள் உண்மையான பயனாளிகளை சென்றடைய வேண்டும் என்பதே இந்த அரசின் நோக்கம். இந்த பட்டாக்கள் மூலம் பயனாளிகள் வீடு கட்டி, நல்ல வாழ்க்கையை உருவாக்கிக் கொள்ள வேண்டும்” என கூறினார். அதனை தொடர்ந்து,“தாராபுரம், கொளத்துப்பாளையம், ருத்ராவதி, சின்னக்காம்பாளையம் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கு இன்று வழங்கப்பட்டுள்ள பட்டாக்கள், அவர்களின் வாழ்க்கையில் புதிய தொடக்கமாக அமையும். அரசு மக்களுடன் உள்ளது. மக்கள் நலனே இந்த அரசின் அடையாளம்” என்று அமைச்சர் தெரிவித்தார்இந்த விழாவில் திருப்பூர் மாநகராட்சி 4வது மண்டல குழு தலைவர் இல.பத்மநாபன், திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் தனசேகர், தாராபுரம் நகர செயலாளர் முருகானந்தம், நகராட்சி தலைவர் பொறியாளர் பாப்பு கண்ணன், தாசில்தார் ராமலிங்கம் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161